தமிழில் சட்ட நூல்கள் - முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!...

முதல் பக்கத் தொடர்ச்சி

16. தமிழ்நாடு சித்த மருத்துவ முறை (மேம்படுத்துதல் மற்றும் மருத்துவத் தொழிலாற்றுநர்கள் பதிவு செய்து கொள்ளுதல்) சட்டம், 34/1997.

17.தமிழ்நாடு மின் இயங்கேணிகள் சட்டம், 35/1997.

18. தமிழ்நாடு நகர் சார்ந்த பரப்பிடங்களிலுள்ள விலங்குகள் மற்றும் பறவைகள் (கட்டுப்பாடு செய்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 46/1997.

19. தமிழ்நாடு பெண்ணிற்குத் துன்பம் விளைவித்தலைத் தடை செய்கின்ற சட்டம், 44/1998.

20. தமிழ்நாடு தொழிலியல் துறைக்கான நோக்கங்களுக்காக நிலத்தைக் கையகப்படுத்துதல் சட்டம், 10/1999.

21. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்களுக்கான நலநிதியச் சட்டம், 25/1999.

22. தமிழ்நாடு குடியானவர் நீர்ப்பாசன அமைப்புமுறை மேலாண்மைச் சட்டம், 07/2001.

23. தமிழ்நாடு உயிரோடு நபர் ஒருவரைப் புதைக்கும் சடங்கினையும் பழக்கத்தினையும் தடை செய்தல் சட்டம், 44/2002.

24. தமிழ்நாடு புகைபிடித்தலையும் எச்சில் உமிழ்வதையும் தடை செய்யும் சட்டம், 04/2003.

25. தமிழ்நாடு தமிழ் கற்பதற்கான சட்டம், 13/2006.

26. தமிழ்நாடு கல்வி வளர்ச்சி நாள் (விளம்புகை மற்றும் கொண்டாடுதல்) சட்டம், 26/2006.

27. தமிழ்நாடு ஏரிகளைப் பாதுகாத்தல் மற்றும் ஆக்கிரமிப்பை அகற்றுதல் சட்டம், 08/2007.

28. தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகளுக்கான நல வாரியச் சட்டம், 18/2007.

29. தமிழ்நாடு மீனவர்கள் மற்றும் மீன்பிடிப்பதிலும் பிற தொடர்புடைய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்கள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலச்) சட்டம், 19/2007.

30. தமிழ்நாடு கிறித்துவப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் இஸ்லாமிய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில் இடங்களை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை ஒதுக்கீடு செய்தல்) சட்டம், 33/2007.

31. தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையச் சட்டம், 31/2008.

32. தமிழ்நாடு மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் மருத்துவச் சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் (வன்முறையையும் சொத்துக்குச் சேதத்தினை அல்லது இழப்பினை ஏற்படுத்துவதையும் தடுத்தல்) சட்டம், 48/2008.

33. தமிழ்நாடு அருந்ததியர்கள் (தனியார் கல்வி நிலையங்கள் உள்ளடங்கலான நிலையங்களில் இடங்கனை மற்றும் அரசின் கீழ் வரும் பணிகளில் நியமனங்களை அல்லது பதவிகளை பட்டியல் சாதியினருக்கான இட ஒதுக்கீட்டிற்குள்ளாக தனி ஒதுக்கீடு செய்தல்) சட்டம், 04/2009.

34. தமிழ்நாடு திருமணங்கள் பதிவுசெய்தல் சட்டம், 21/2009.

35. தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்ப டுத்துதல்) சட்டம், 22/2009.

36. தமிழ்நாடு பெருநகர் திட்டக் குழு சட்டம், 30/2009.

37. தமிழ்நாடு (நகராட்சிப் பகுதிகளில்) சொத்துரிமை மாற்றங்களின் மீதான தீர்வைச் சட்டம், 32/2009.

38.தமிழ்நாடு மாநிலத் தொழில் நுட்பக் கல்வி மன்றச் சட்டம், 04/2010.

39. தமிழ்நாடு சமச்சீர் பள்ளிக் கல்வி முறைச் சட்டம், 08/2010.

40. தமிழ்நாடு மாநிலச் சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், 21/2010.

41.தமிழ்நாடு தமிழ்மொழி மூலமாகப் படித்த நபர்களை அரசின் கீழ் வரும் பணிகளில் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்தல் சட்டம், 40/2010.

42. சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டம், 44/2010.

43. தமிழ்நாடு தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலச் சட்டம், 04/2011.

தமிழ்நாடு மாநிலச் சட்டங்கள் புதிய பதிப்பு புத்தகங்கள்

1. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழக சட்டம், 09/2012.

2. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம், 22/2012.

3. தமிழ்நாடு பாரம்பரிய ஆணையச் சட்டம், 24/2012.

4. தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைச் சட்டம், 03/2013.

5.தமிழ்நாடு பொது இடங்களுக்குள் நுழைவதற்கான (ஆடை மீதான தடையை நீக்குதல்) சட்டம், 09/2014.

6. தமிழ்நாடு மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான விடுதிகள் மற்றும் காப்பகங்கள் (ஒழுங்குமுறைப்படுத்தும்) சட்டம், 18/2014.

7.தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம், 24/2014.

8. தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் கேளிக்கைகள் வரிச் சட்டம், 20/2017.

9. தமிழ்நாடு எல்லை வரையறை ஆணையச் சட்டம், 23/2017.

10.தமிழ்நாடு சொத்துரிமையாளர் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் முறைப்படுத்துதல் சட்டம், 42/2017.

11.தமிழ்நாடு தனியார் சட்டக் கல்லூரிகள் நிறுவுதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 22/2018

12.தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 33/2018.

13.தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம், 35/2019.

14. தமிழ்நாடு பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல மேம்படுத்துதல், சட்டம், 11/2020.

15. தமிழ்நாடு பொருளாதாரப் பள்ளிச் சட்டம், 25/2020.

16.தமிழ்நாடு அரசுப்பள்ளிகளின் மாணவர்களுக்கு மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆகியவற்றின் இளங்கலை படிப்புகளுக்கு முன்னுரிமை அடிப்படையிலான சேர்க்கைச் சட்டம், 34/2020.

17. தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டம், 17/2021.

18.தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்), சட்டம், 14/2022.

19.தமிழ்நாடு பத்திர எழுத்தர்களின் நல நிதியச் சட்டம், 21/2022.

20. தமிழ்நாடு அடுக்குக்குடியிருப்பு சொத்துரிமைச் சட்டம், 44/2022.

மேற்கண்ட 100 சட்டப் புத்தகங்களையும், தமிழ்நாடு அரசின் இணையதளத்திலிருந்து (www.tn.gov.in) பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

இந்த நிகழ்ச்சியில், சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சட்டத் துறை அரசு செயலாளர் ஜார்ஜ் அலெக்சாண்டர், மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையத்தின் தலைவர் ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதியரசர் திருமதி தாரணி, உறுப்பினர்கள் கோபி ரவிக்குமார், முகமது ஜியாபுதீன், வில்ஸ்டோ டாஸ்பின், முரளி அரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருச்சி (தெ) மாவட்டக் கழகச் செயலாளர், காணை (தெ) ஒன்றிய தேர்தல் பொறுப்பாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல், காணை தெற்கு ஒன்றியம், விக்கிரவாண்டி சிறுவாக்கூர் கிராமத்தில் காலை 7 மணி முதல் 10 மணி வரையில் வீடுதோறும் சென்று துண்டு பிரசுரம் வழங்கி வாக்குகள் சேகரித்தார். உடன் விழுப்புரம் (தெ) மாவட்டக் கழகப் பொறுப்பாளர் பொன்.கௌதம சிகாமணி, காணை (தெ) ஒன்றியத் தேர்தல் பொறுப்பாளர், மாநில மருத்துவ அணி இணை செயலாளர் டாக்டர் இரா.இலட்சுமணன், ஒன்றிய கழகச் செயலாளர் கல்பட்டு ராஜா, ராதாமணி, முருகன், செல்லப்பாண்டியன் மற்றும் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள், ஒன்றிய கவுன்சிலர், ஊராட்சி மன்ற தலைவர், கிளைச் செயலாளர்கள், கிளை பொறுப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி

கடம்பையில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்கப்படுமா?

சட்டப்பேரவையில் கு.பிச்சாண்டி கேள்வி!

சென்னை, ஜூலை 4 - சட்டப்பேரவையில் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி எழுப்பிய கேள்விகளும் அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அளித்த பதிலும் வருமாறு:-

கு.பிச்சாண்டி: கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கடம்பை கிராமத்தில் தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்: திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கடம்பை கிராமத்தில் உள்ள 50 ஏக்கர் அரசு நிலத்தில் தற்போதைக்கு ஒரு ELCOT IT Park உருவாக்குவதற்கு அரசாங்கத்தில் எந்தத் திட்டமும் இல்லை. ஏனென்றால், சுமார் 160 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சென்னை சோழிங்கநல்லூரில் 377 ஏக்கர் பரப்பளவிலுள்ள ELCOSEZ பூங்காவில் சுமார் 70 இலட்சம் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அதேபோல், 187 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஓசூரில் இருக்கிற ஒரு ELCOT IT Parkலும் பல நிறுவனங்கள் இயங்கிவருகின்றன. எனவே, தற்போது இங்கே ஒரு புதிய IT Park துவக்குவதற்கு எந்தத் திட்டமும் இல்லையென்று தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கு.பிச்சாண்டி: திருவண்ணாமலை தொகுதியில், TIDEL Park ஒன்று அமைப்பதற்கு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் சார்பில் அறிவிப்பை வெளியிட்டுள்ளதற்காக முதலமைச்சர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாக ராஜன் அவர்களுக்கும், முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கும், எங்களுடைய அமைச்சர் எ.வ.வேலு அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கீழ்பெண்ணாத்தூரிலிருந்து சென்னையும், ஓசூரும் அருகாமையில் இருக்கின்றன என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலில் கூறினார்கள். அங்கெல்லாம் இடம் கிடைப்பது கடினமாக இருக்கும். ஆனால் எங்களுடைய இடத்தில் 140 ஏக்கர் பரப்பளவில் அரசு புறம்போக்கும் நிலம் இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற இடங்கள் இருக்கக்கூடிய அந்த பகுதியில் கட்டினால் தொடர்ந்து வளர்ச்சி அடைவதற்கு வாய்ப்பாக இருக்கும். இதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்: நிலம் கிடைப்பது கடினமானது தான், உண்மை. அது இருப்பது நன்மைதான். அதற்குமேல் நான் பலமுறை கூறியதைப்போல், வேலை வாய்ப்பை உருவாக்குவதில் IT துறை தான் மிகவும் குறுகிய நேரத்தில், குறுகிய செலவில் வேலையை உருவாக்கக்கூடிய துறை. ஏனென்றால், internet connectivityம் சுமார் 100 சதுர அடியும் இருந்தால் ஒரு வேலையை உருவாக்க முடியும். ஆனாலும், நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்பதான் எங்களால் பணி செய்ய முடியும். நான் சில புள்ளி விவரங்களை சுட்டிக் காட்டுகிறேன். ஏனென்றால், நேற்று வெட்டுத் தீர்மானங்களிலும், உறுப்பினர்கள் பேசும்போது வைத்த கோரிக்கைகளிலும் சுமார் 25, 30 இடங்களில் IT Park உருவாக்குவதற்கு கோரிக்கைகள் வந்திருக்கின்றன.

ஆனால், இந்த நிதியாண்டிற்கு IT துறைக்கு மொத்த நிதி ஒதுக்கீடு 119 கோடி ரூபாய். இந்த நிதி ஒதுக்கீட்டை பல்வேறு துறைகளுக்கு ஒப்பிட்டு பார்த்தால், of course பள்ளிக் கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் 30,000 கோடி ரூபாய், 35,000 கோடி ரூபாய், தொழில் துறையை எடுத்துக் கொண்டால் சில ஆயிரம் கோடி ரூபாய், ஏன் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையைப் எடுத்துக்கொண்டால்கூட ஏறத்தாழ 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு இருக்கின்ற சூழ்நிலையில் 100 கோடி ரூபாய் ஆண்டுக்கு IT துறைக்கு ஒதுக்கீடு செய்யும் போது ஓரளவுக்குத்தான் எங்களால் செயல்படுத்த முடியும்.

அதற்குமேல் இன்னொன்றையும் கூறுகிறேன். நம்முடைய இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கை மொத்த செலவு 4 இலட்சத்து 59 ஆயிரம் கோடி ரூபாய். அதை ஒப்பிட்டுப் பார்த்தால் கர்நாடகா மாநிலம் 4 இலட்சத்துக்கு குறைவாக இருக்கும், தெலுங்கானா மாநிலம் 3 இலட்சத்துக்கு குறைவாக இருக்கும். ஆனால், கர்நாடாகா மாநிலம் ஆண்டுக்கு IT துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்தது 750 கோடி ரூபாய். தெலுங்கானா மாநிலம் 776 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தது. அந்த மாநிலங்களுக்கு ஒதுக்கிய தொகையில் ஒரு சிறிய சதவிகிதம்தான் நமக்கு நிதி ஒதுக்கியும், இந்தத் துறை இங்கு சிறப்பாக செயல்படுகிறது என்றால், அது மனிதவள திறனின் வெளிப்பாடு, தமிழ்நாட்டைவிட வேறு எந்த மாநிலத்திலும் இந்த அளவுக்கு IT திறமையும், இளைஞர்களும் இல்லை என்பதனால் இந்த அளவிற்கு இருக்கிறோம். இன்னும் சில திருத்தங்கள் மேற்கொள்ள இருக்கிறோம். அது, உறுப்பினர் அவர்கள் அடுத்தக் கேள்வியை கேட்டால், நான் பதில் கூறுகிறேன்.

கு. பிச்சாண்டி : மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யும்போதும், அரசாங்கத்தில் வேலைவாய்ப்புகளுக்காக விண்ணப்பிக்கும் போதும், ஒரே நேரத்தில் எல்லோரும் போய் செய்யும் போது, net connection (Internet Connection) கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே, அனைத்து இடங்களிலும் 5G அளவில் கொண்டு வந்தால்தான், அந்தப் பணிகள் நன்றாக நடைபெறும். அதையும் நம்முடைய அரசு கவனிக்குமா? அதேபோன்று, software ஏற்றுமதியில் தற்போது இந்தியாவில் தமிழகம் எத்தனையாவது இடத்தில் இருக்கிறது? எவ்வளவு மதிப்புள்ள softwares ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன? என்ற விவரத்தையும் அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் பழனிவேல் தியாகராஜன்: உறுப்பினர் அவர்கள் கேட்டது உட்கட்டமைப்பு; ஏற்கெனவே TANFINETஐ ஏற்கெனவே எல்லா இடத்திலும் fibre cable போடுவதாகக் கூறியிருக்கிறோம். அதேபோன்று, software experts சொல்கிறார்கள், STPI (Software Technology Parks of India) வெளியிடும் தகவல்களில், ஒன்றிய அளவில் நமக்கு இருக்கிற பங்கு தெளிவாகிறது. ஆனால், No.1 இடத்தில் இல்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் No.1 இடத்தில் இருந்தோம். இத்தனை கேள்விகள் இதே தலைப்பில் வந்ததனால், மேலும் ஒரு நிமிடம் நான் கூற வேண்டியது என்னவெனில், விளைவை மாற்ற வேண்டும் என்றால், எந்த நோக்கத்தைச் சென்று போய்க் கொண்டிருக்கிறோமோ, செயல் முறையை மாற்றினால் தான் விளைவை மாற்ற முடியும். என்னைப் பொறுத்தவரையில் நிதிக்கு மூன்றாவது முக்கியத்துவம் தான். முதல் முக்கியத்துவம் முதலமைச்சர் அவர்களுடைய ஆதரவும், ஊக்கமும் இருந்தால், அதை வைத்து எதை வேண்டுமானாலும் செய்யலாம். அதனால் சொல்கிறேன்; இரண்டு ஆண்டு நிதியமைச்சராக இருந்தபோது, 20 ஆண்டுகளில் செய்யாத மாற்றத்தை இரண்டு ஆண்டுகளில் செய்தேன் என்று கூறுவேன். அதே நம்பிக்கை எனக்கு இருக்கிறது. இன்னும் ஓராண்டு இருந்தால் IT துறையில், நேற்றையதினம் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிற பல மாற்றங்களுக்கு உட்பட்டு, இன்னும் கூடுதல் செயல்முறையை மாற்றி, இன்னும் ஓராண்டில் இதுவரையிலும் இல்லாத, 20 ஆண்டுகள் பின்தங்கியிருந்ததை சீர்திருத்தும் வகையில் சிறப்பாக செய்வோம் என்று கூறிக்கொள்கிறேன். ஓரிரண்டு projects, PPP (Public Private Partnership) modelல் செயல்படுத்திக் காண்பித்து விட்டால், அதற்குப் பிறகு இங்கு எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. மீண்டும் சொல்கிறேன், மனிதவளம் இங்கே மட்டுமல்ல, வெளிநாட்டில் இருக்கிற குறிப்பாக Bay Area (San Francisco Bay Area) என்று கூறப்படுகின்ற, Silicon Valley என்று கூறப்படுகின்ற innovation hub, IT industriesக்கே innovation hubல் இருக்கிற, திறமையில் முதலிடம் பெற்றிருப்பவர்கள் தமிழர்கள்.

நான் அடுத்த வாரம் அங்கே செல்கிறேன் முதலமைச்சர் அவர்கள் உத்தரவுடன். FeTNA (Federation of Tamil Sangams of North America) நான் 15 ஆண்டுகளுக்குப் பிறகு செல்கிறேன். விடுமுறை வாரமாக இருந்தாலும், என்னை இரண்டு நாளில் பார்ப்பதற்கு 100தமிழர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். அந்தளவிற்கு தமிழ்ப் பற்று உள்ளவர்கள், வரலாறு உள்ளவர்கள் அங்கு இருக்கிறார்கள். அதனால் நிதியை ஒரு பொருட்டாக இல்லாமல், அதற்குமேல் வளர்ச்சியை உருவாக்கு வதற்கான திட்டத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அதில், TANFINET ஒரு பங்கு; PPP model ஒரு பங்கு; முதலீட்டாளர்கள் நிதி ஒரு பங்கு என இதையெல்லாம் செய்து, இன்னும் ஓராண்டில் இந்த வளர்ச்சியை, ஏற்கெனவே சென்ற ஆண்டு 100 சதவிகிதம் அதிகமான IT spaceஐ, இன்னும் இந்த ஆண்டு சிறப்பிப்போம் என்று உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பதிலளித்தார்.

உட்கட்டமைப்புத் திட்டங்களுக்கு உரிய நிதியை ஒதுக்காமல்

தமிழ்நாட்டின் மீது வன்மத்தைக் காட்டுவது கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது!

மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேச்சு!

புதுடெல்லி, ஜூலை 4 - மாநிலங்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கழக உறுப்பினர் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது :-

இந்த நாடு தெரிந்து கொள்ள வேண்டிய சில உண்மைகளை இந்த அவையில் பேச எனக்கு வாய்ப்பளித்த எங்கள் தலைவர் மாண்புமிகு தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு முதலில் என் நன்றிகள்.

தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்திருப்பதாக ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார். சுயமாக செயல்பட முடியாத அளவுக்கு, கூட்டணிக் கட்சிகள் உதவியுடன் அமைந்த மைனாரிட்டி அரசு இந்த மூன்றாவது அரசு என்பதை அவர் சொல்ல மறந்துவிட்டார். நானூறு இடங்கள் என்று கோஷமிட்டவர்களுக்கு மக்கள் சரியான பாடம் புகட்டி இருக்கிறார்கள்.

அமெரிக்காவுக்கு ஒரு விக்கிலீக்ஸ் போல எத்தனையோ ரகசியங்கள் கசிந்ததை இந்த உலகம் பார்த்திருக்கிறது. கடந்த பத்தாண்டு காலபி.ஜே.பி. அரசிலும் பல விஷயங்கள் கசிந்துள்ளன. 'நீட்'வினாத்தாள், நெட் தேர்வு வினாத்தாள் போன்றவை கசிந்ததுடன், விமான நிலையகூரைகள், ராமர் கோவில் கூரை, வந்தே பாரத் ரயில் கூரை என பலவும் இந்த ஆட்சியில் கசிந்து ஒழுகுகின்றன. இத்தனையும் பார்த்து இந்த நாட்டு மக்கள் ரத்தம் கசிகிறார்கள் என்பதுதான் உண்மை.

அதேபோல மோடியின் ஆட்சியில், விமான நிலையங்கள், பாலங்கள், பணமதிப்பு, ஜனநாயகம், கூட்டாட்சி என பலவும் வீழ்ந்து வருகின்றன. இன்னும் எத்தனை வீழப்போகிறதோ யாருக்கும் தெரியவில்லை.

கண்துடைப்புக்காக கொண்டுவந்த மசோதா!

அவசர நிலை காலத்தைப் பற்றி ஜனாதிபதி கவலை தெரிவித்திருக்கிறார். இவர்களுக்கு உண்மையிலேயே அவ்வளவு கவலை இருக்குமானால், அந்தக் காலகட்டத்தில் பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வியை இப்போது மீண்டும் மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும்.

சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்தில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் பற்றியும் ஜனாதிபதி பேசியிருக்கிறார். இந்த விஷயத்தில் இதே அரசு எவ்வளவு அவசரம் அவசரமாக பெண்கள் இடஒதுக்கீட்டும் சோதாவைகண்துடைப்புக்காகக் கொண்டுவந்தது என்பதை இந்த நாடு அறியும். அந்த சட்டத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டுமானால், தொகுதி மறுவரையறை செய்ய வேண்டும். அதற்கு மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்த வேண்டும். ஆனால் இந்த அரசு அதைச் செய்யாமல் மவுனம் காக்கிறது. இதைத்தான் 'போகாத ஊருக்கு வழி தேடுவது மாதிரி'என் பார்கள் தமிழில். இந்த அரசு செயல்படுத்த முனைகிற பல திட்டங்களும் இப்படித்தான் இருக்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் பதினைந்து எய்ம்ஸ்மருத்துவ மனைகளைக் கட்டியதாகச் சொல்கிறார்கள். அதை பதினான்கு என்று திருத்துங்கள். அவற்றில் ஒன்றாக நீங்கள் சுட்டிக்காட்டும் எய்ம்ஸில் ஒரு சுவர்கூட இன்னும் கட்டப்படவில்லை. மக்களை ஏமாற்றாதீர்கள்.

நீட் வினாத்தாள் கசிந்ததை சர்வ சாதாரணமாக எடுத்துக்கொண்டு, கடந்த காலங்களிலும் இப்படி நடந்திருக்கிறது என்கிறார் ஜனாதிபதி. அப்படி சாதாரணமாகச் சொல்லாதீர்கள். இது லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலம் மட்டுமல்ல... அவர்களின் கல்விக்காக ஒவ்வொருவரின் ஒட்டுமொத்த குடும்பத்தினரின் உழைப்பும் இதில் அடங்கியிருக்கிறது. ஆனால் நீட் தேர்வு முறைகேடுகள் பற்றி இந்த அரசு உருப்படியாக வாய் திறந்து எதுவும் சொல்லவில்லை.

பொருளாதார சமமற்ற நிலை!

பிரிட்டிஷாரின் காலனி ஆதிக்கத்தில் இருந்ததைவிட, இப்போது இந்த கோடீஸ்வரர்கள்ராஜ்ஜியத்தில் பொருளாதார சமமற்ற நிலை அதிகமாக இருக்கிறது. இந்த நாட்டில் 70 சதவிகிதம் மக்கள் தினசரி நூறு ரூபாய் கூட சம்பாதிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். ஆனால் 10 சதவீத பணக்காரர்கள் தாங்கள் வளர்க்கும் நாய்களுக்கு தினசரி ஆயிரக்கணக்கில்

செலவிடுவதையும் பார்க்க முடிகிறது. மீதமுள்ள 20 சதவீதத்தினர் எந்தப் பக்கமும் போக முடியாமல் தவித்து வருகிறார்கள். இந்தப் பொருளாதார சமநிலையற்ற தன்மை பெண்களையும் குழந்தைகளையும் அதிகம் பாதிக்கிறது.

சமூக வாரியாக இந்த சமநிலையற்ற தன்மை படிந்துள்ளதால்தான், இதற்கு நிரந்தரத் தீர்வு காண சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துவது அவசியம் என்பது வலியுறுத்தப்படுகிறது. ஆனால் இந்த அரசு அதைச் செய்ய மனமில்லாமல் இருக்கிறது. இப்போதுள்ள கணக்கீடுகள் சில பத்தாண்டுகள் பழமையான, பயனற்ற கணக்கீடுகள்என்பதையும் இந்த அரசு உணர்ந்துகொள்ளமறுக்கிறது.

பணவீக்கத்தாலும், ஏழ்மை மற்றும் வேலை வாய்ப்பின்மையாலும் நடுத்தர வர்க்கத்தினர் ஏழைகளாகவும், ஏழைகள் பரம ஏழைகளாகவும் மாறிவருவது துக்க கரமானது.

தமிழ்நாடு போன்ற பி.ஜே.பி. ஆளாத மாநிலங்கள் மீது ஒன்றிய அரசின் பார்வை படுவதே இல்லை. அம்மாநிலமக்களை மாற்றாந்தாய் மனப்பான்மையுடனே இந்த அரசு நடத்துகிறது. இது நம் அரசியல் சட்டத்தால்வலியுறுத்தப்பட்டுள்ள கூட்டாட்சி தத்துவத்திற்கு முற்றிலும் எதிரானது.

வேலை வாய்ப்பின்மை மற்றும் பணவீக்கம் நம்மை அச்சுறுத்துக் கொண்டுள்ளது... இதை சரிசெய்யாவிட்டால் மாநிலங்களின் தன்னாட்சியுடைய நிதியாதாரம் பாதிக்கப்படும் என்பதையும் ஒன்றிய அரசு உணரமறுக்கிறது. மொத்தத்தில் சொல்ல வேண்டுமானால், இந்த நாட்டின் ஏழைகள் மற்றும் நடுத்தர மக்கள் பற்றி இந்த அரசு கவலைப்படவே இல்லை. தமிழ்நாடும் இப்படி வஞ்சிக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்று.

பொய் வாக்குறுதிகள் - பொய்ப் பிரச்சாரங்கள்!

மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை சிந்துபாத்கதை போலநீண்டுகொண்டே போகிறது. இவ்வளவு தாமதம் ஆகிறது என்பதை ஒப்புக்கொள்ள இந்த அரசு மறுக்கிறது. அதேபோல சென்னை மாநகர போக்குவரத்து நெரிசலைக் குறைக்க வழிசெய்யும் இரண்டாவது கட்ட சென்னை மெட்ரோ ரயில் திட்டத்துக்கு 63 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலின் போது பிரதமரே சொன்னார். ஆனால் 2024 ஜூலை மாதம் வரை ஒரு ரூபாய் கூட இத்திட்டத்திற்காக ஒதுக்கவில்லை. எவ்வளவு பெரிய துரோகம் இது?

இதுபோல தமிழ்நாட்டின் அத்தியாவசியமான, உட்கட்டமைப்புத் திட்டங்கள் பலவற்றுக்கும் உரிய நிதியை ஒதுக்காமல் வேடிக்கை பார்க்கிறது ஒன்றிய அரசு. இது அரசியல் சட்டத்திற்கு விரோதமானது. எதற்காக இந்த ஓரவஞ்சனை? தமிழகத்தில் ஒரு இடம் கூட வெற்றி பெறாததால், தமிழ்நாட்டு மக்கள் மீது பிரதமரும் அவரது அமைச்சரவை சகாக்களும் கோபமாக இருக்கிறார்களா? இது ஜனநாயகமா?

கடந்த பத்தாண்டுகளாக பட்ஜெட் உரைகள் வாசிக்கப்படுகின்றன. ஆனால் அதில் சொல்லப்பட்ட திட்டங்கள், அறிவிப்புகள் எல்லாமே நேர்மையற்றதாகவும் பொய்கள் நிறைந்ததாகவும் இருந்திருக்கின்றன. இப்படி பொய்யான வாக்குறுதிகள், பொய்ப்பிரச்சாரங்கள் செய்வதிலிருந்து இந்த அரசு வெளியே வரவேண்டிய நேரம் வந்துவிட்டது. இனிமேலாவது மக்களுக்கு நேர்மையானவர்களாக இருங்கள்.

ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்குவோம் என்றீர்கள்... பத்தாண்டுகளில் இருபது கோடி வேலை வாய்ப்புகள்உருவாகியிருக்க வேண்டும். ஆனால், பத்து கோடி பேர் பார்த்த வேலையை இழந்திருக்கிறார்கள். இன்னும் பல லட்சம் பேர் வேலையை இழந்து கொண்டிருக்கிறார்கள்.

2022 ம்ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்குவோம் என்று சொன்னீர்கள். அது நடக்கவில்லை. ஆனால், விவசாயிகள் தற்கொலை செய்யும் எண்ணிக்கைதான் இரண்டு மடங்காக உயர்ந்திருக்கிறது. அதேபோல பெட்ரோல் டீசல் விலையை குறைப்பதாகச் சொன்னீர்கள். பெட்ரோல் விலை லிட்டர் நூறு ரூபாயைத் தாண்டி பல மாதங்கள் நீடிப்பதை இந்த அரசு வேடிக்கைதான் பார்க்கிறது. விலைவாசி உயர்வு பற்றியும் இந்த அரசு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

மெஜாரிட்டி பலத்தை வைத்து நீங்கள் விரும்பியபடியெல்லாம் மக்கள் விரோத சட்டங்களைக் கொண்டுவந்து, விவாதமின்றி நிறைவேற்றினீர்கள். அதனால்தான் இப்போது உங்களை மைனாரிட்டிஅரசாக மக்கள் சுருக்கியிருக்கிறார்கள். இனிமேலும் உங்களை நீங்கள் திருத்திக் கொள்ளவில்லை என்றால், ஆட்சி அதிகாரத்தில் இருந்து முற்றிலுமாக தூக்கி எறியப்படுவீர்கள் என்பது உறுதி.

நிறைவாக இரண்டு கருத்துக்களைச் சொல்கிறேன்... கடந்த காலங்களில் என்ன நடந்திருந்தாலும்